**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.113/2012**

தேதி . 30.11.2021

பெயர் . வெங்கடேசன்

த/பெ . கண்ணையா

வயது . 50

வா.சா. 1

**குறுக்கு விசாரணை**

என் அப்பா பெயர் என்ன என்றால் கண்ணையா. என் தாத்தா பெயர் என்ன என்றால் துரைசாமி மந்தடி. வழக்கு சொத்து என் பூர்வீக சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு என் முன்னோர்கள் பெயரில் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து என் பூர்வீகம் என்பதால் எனக்கும் பாகம் உண்டு என்றால் சரிதான். வழக்கு சொத்து என் பெயருக்கு என் அப்பா தான பத்திரம் எழுதி வைத்தது வா.த.சா.ஆ.1 செல்லாது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 ன் அடிப்படையில் நான் வாங்கிய பட்டா வா.த.சா.ஆ.2 செல்லாது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.11 பதிவு செய்யப்பட்டாத கிரைய லட்டரில் கண்ணனுக்கு பதிவு செய்யப்பட்ட கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். கண்ணன் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் வாதுரையில் பிரமாண வாக்குமூலத்தில் வா.த.சா.ஆ.11ன் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ.11 உள்ள கிரைய பத்திரத்தை தாக்கல் செய்யததால் வா.த.சா.ஆ.11 செல்லாது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 தாயரிக்கப்ட்டது என்பதால் செல்லாது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.11 1983ல் எழுதிப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.11 உண்மையான ஆவணமாக இருந்திருந்தால் வா.த.சா.ஆ.1 ல் குறிப்பிட்டு இருப்பேன குறிப்பிடாததால் வா.த.சா.ஆ.11 நிலைக்கத்தக்கதல்ல. வா.த.சா.ஆ.11 ன் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் அப்போது ரூ5000/-. ரூ100க்கு மேல் இருந்தால் பதிவு செய்ய வேண்டும் வா.த.சா.ஆ.11 ரூ5000 மேல் என்பதால்

கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 ன் சக்குபந்தி சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் வாதுரையில் சக்குபந்தி சொல்லி தான் தாக்கல் செய்துள்ளேன். என்றால் சரிதான் வழக்கில் சொல்லியுள்ள சக்குபந்தி எது பார்த்து போட்டேன் என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் அளவு சென்ட் அளவாக சொல்லியுள்ளேன் நீளம் அகலம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் 1, 2 ஐட்டங்கள் 1ம் ஐட்டம் 7848 மற்றும் 2ம் ஐட்டம் 9592 என்று சொல்லியுள்ளேன் கிழக்கு மேற்கு எவ்வளவு என்று சொல்லவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 215/8 எத்தனை வீட்டு மனைகள் விற்கப்பட்டது என்றால் எதுவும் விற்கவில்லை நிலமாக தான் உள்ளது பிளாட்டு போடவில்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**